திரு. அ. இராசமாணிக்கம்: இந்தச் சாலையின் அகலத்தை நோக்கத்தில் கொண்டு, அந்த ஊரில் இட நெருக்கடி இருக்கின்ற காரணத்தினால் நகரத்திற்குப் புறத்தே போக இந்த அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அரசுக்கு எழுதி அனுப்பினால், பரிசீலிக்கலாம்.

Sunflower cultivation.

* 14 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to encourage the growth of sunflower in this State?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஆம்.

திரு. ஆ. கு. சுப்பையா : சூரியகாந்தி செடி வளர்ப்பதற்கு தஞ்சை மாவட்டத்தில் ஏதாவது விசேஷமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டில் கோவை, தஞ்சாவூர், திருச்சி, இராமநாதபுரம், மதுரை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம் ஆகிய எல்லா மாவட்டங்களிலும் 160 ஹெக்டார் பரப்பு அளவுக்கு 320 விளக்கப் பாத்திகள் ஆங்காங்கு நிறுவுவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சென்ற ஆண்டு பருத்தி அதிகமாகப் பயிரிடுங்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் மிக வேகமாக பிரசாரம் செய்யப்பட்டது. நாங்கள் எல்லாம் மிக அதிக லாபம் வரும் என்று எதிர்பார்த்தோம். அதனால் பருத்தி போட்டோம். ஆனால் பஞ்சை வாங்குவதற்கு ஆள் கிடையாது. அதைப் போல் இப்பொழுது சூரிய காந்தி பயிரிடுங்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. அம்மாதிரி அதிகமாக உற்பத்தி செய்யும் பொருள் விற்பனை ஆவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சென்ற ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் 10,000 ஏக்கரில் பி. ஆர். எஸ். 72 பருத்தி சாகுபடி செய்யப்பட்டது அது விற்கப்படவில்லை என்று

1973 பிப்ரவரி 5]

சொன்னதன் காரணத்தினுல் இந்த ஆண்டு அதை வாங்குவதற்கு 3 இடங்களில் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் மூலமாக வாங்குவதற்கு மூன்று கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குறைந்தபட்சம் நல்ல ரகத்திற்கு ரூ. 200 வழங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் போடப்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சூரிய காந்தியை எந்த அளவுக்கு விளம்பரம் செய்து உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்று சொல்லுகிறோமோ, அந்த அளவுக்கு வாங்கும் சக்தியை அதிகரிப்பதற்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE: Sir, the Hon. Minister has stated that attempts have been made to sell it. May I know whether the Government have at their disposal any agency which will extract sunflower oil and also whether there is any ageny which has made a market survey of the consumer's needs? May I request the Hon. Minister to give all the details?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தனியாக அதன் விவரங்கள் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனாலும், அதனை வாங்குவதற்குத் தனியாக கூட்டுறவுத் துறை மூலம் ஏற்பாடு செய்யலாமா என்று அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. எஸ். வடிவேல்: சூரிய காந்தி பயிர் செய்வதற்கு அரசு பெரும் வகையில் ஏதாவது உதவி அளிக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஒரு ஹெக்டாருக்கு ரூ. 300 விதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதைப் போலவே இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 11 பெருமானம் உள்ள சிறிய பொட்டலங்கள் விதைகள் சுமார் 2 லட்சம் ஏக்கருக்கு இலவசமாக வழங்கப்படும். அத்துடன் இந்தத் திட்டத்தின் கீழ் வரும் உழவர்களுக்கு ஹெக்டார் ஒன்றுக்கு ரூ. 150 என்ற விகிதத்தில் கூட்டுறவு வங்கிகள் மூலம் 60,000 ஹெக்டார்களுக்கு குறுகிய காலக் கடன்கள் வழங்குவதற்காக ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.